# இரண்டாம் பருவத் தேர்வு - 2024

6- ஆம் வகுப்பு

பதிவு எண் 6003

## தமிழ்

காலம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

குறிப்புகள் :

- மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.
- விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.
- தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 X 1 = 4

1. மாணவர் பிறர் ......... நடக்கக் கூடாது.

அ) போற்றும்படி ஆ) தூற்றும்படி இ) பார்க்கும்படி ஈ) வியக்கும்படி

2. 'பசியின்றி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............

அ) பசி + இன்றி ஆ) பசி + யின்றி இ) பசு + இன்றி ஈ) பசு + யின்றி

3. 'கலம்+ ஏறி' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..................

அ) கலம் ஏறி ஆ) கலமறி இ) கலன்ஏறி ஈ) கலமேறி

4. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் .............

அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) நெசவாளி ஈ) முதலீட்டாளர்

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 2 X 1 = 2

5. குழந்தைகள் பள்ளியில் ஏற்றத்தாழ்வின்றிப் படிக்க ............. அறிமுகப்படுத்தினார்.

6. கதிர் முற்றியதும் .................. செய்வர்.

**III பொருத்துக.** 4 X 1 = 4

| | | | |
|---|---|---|---|
| 7. | விடிவெள்ளி | - | பஞ்சுமெத்தை |
| 8. | மணல் | - | ஊஞ்சல் |
| 9. | புயல் | - | போர்வை |
| 10. | பனிமூட்டம் | - | விளக்கு |

AL - AMEEN TUITION & TUTORIAL CENTRE
PAPPIREDDIPATTI
DHARMAPURI (Dt) - 636 905.

**IV கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 X 2 = 10

11. நாம் எவ்வாறு வாழ்ந்தால் பெருமை பெறலாம்?
12. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப்பாடல் கூறுவது யாது?
13. நாம் எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?
14. போகிப்பண்டிகை எதற்காகக் கொண்டாடப்படுகிறது?
15. வணிகம் என்றால் என்ன?
16. இன எழுத்துகள் என்றால் என்ன?
17. மயங்கொலி எழுத்துகள் யாவை?

**V கீழ்க்காணும் வினாக்களுள் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3 X 4 = 12

18. காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

19. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?

20. சிறு வணிகம், பெரு வணிகம் - வேறுபடுத்துக.

21. ஆசாரக் கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

22. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?

## VI அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6

23. அ) "மன்னனும் மாசறக்" எனத் தொடங்கும் மூதுரைப் பாடலை எழுதுக. (அல்லது)

ஆ) "பாயும்புயல் நம்ஊஞ்சல்" எனத் தொடங்கும் கடலோடு விளையாடுப் பாடலை எழுதுக.

24. "வெள்ளத்து" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## VII கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 X 2 = 10

25. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) ஏட்டுக்கல்வி -

ஆ) சோம்பல் -

26. தொடரை நீட்டித்துப் புதிய தொடர்களை உருவாக்குங்கள்.

*மழை பெய்தது.*

அ) ............ மழை பெய்தது.

ஆ) ........ .......... மழை பெய்தது.

27. தொகைச் சொல்லை விரித்து எழுதுக.

அ) முக்கனி -

ஆ) முத்தமிழ் -

28. பின்வரும் நவமணிகளை அகரவரிசைப்படுத்தி எழுதுக.

நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.

29. கலைச்சொல் தருக.

அ) Education -

ஆ) Makeup -

## VIII பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும். 2 X 6 = 12

30. அ) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

ஆ) மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்குக் காரணமான நிகழ்வு யாது?

31. அ) 'காமராசர்' என்னும் தலைப்பில் கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை – இளமைக்காலம் – கல்விப்பணி – நிறைவேற்றிய பிற திட்டங்கள் – முடிவுரை.

(அல்லது)

ஆ) பொங்கல் திருநாள் குறித்துக் கட்டுரை எழுதுக.

---



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com